# மாணவர் கையேடு

## வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டம்

கட்டம் - 09

## கல்வி ஆண்டு 2024/2025

கா.போ.த. (உயர்தர)

பரீட்சை 2021/2022/2023

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி**

**அமைச்சு**

# மாணவர் கையேடு - வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத்திட்டம்

## அறிமுகம்

நாட்டின் பொருளாதார மற்றும் மானிட வள அபிவிருத்திக்காக அத்தியாவசிய உயரிய மட்டத்திலான மானிட மூலதனக் குழாமினை உருவாக்குவது உயர் கல்வி முறைமை மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான உயரிய கல்வியைக் கொண்ட மானிட வளக்குழாம் காணப்படுகின்றமை நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக விசேட காரணியாக அமைகின்றது.

இலங்கையின் அரச பல்கலைக்கழக முறையில் வசதிகளை வழங்க முடிவது க.பொ.த. (உயர்தர) பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழகத்திற்கு தகமை பெறும் மாணவர்களில் 25மூ வீதத்திற்கு மாத்தரமாகும். இது எவ்வாறாக இருப்பினும் அரச பல்கலைக்கழகங்களில் ஆசனங்களை பெற்றுக்கொள்ள முடியாத பெரும்பான்மையான க.பொ.த உயர்தரத் தகைமை கொண்ட மாணவர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த உள்நாட்டு நிறுவனங்களில் அல்லது பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அரச சார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவனங்களில் உயர் கல்விப் பாடநெறி கட்டணத்தை தாங்கிக் கொள்ள முடியாதளவு காணப்படுகின்றது. இந்தத் தேவையினை கருத்திற் கொண்டு இலங்கையில் க.பொ.த. (உ.த) கல்வியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்களுக்காக உயர் கல்வி வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் அரச சார்ப்பற்ற பல்கலைக்கழகங்களைத் தொடர்புபடுத்தி வட்டியற்ற கடன் யோசனைத் திட்டத்திற்கமைய 2017 ஆம் ஆண்டு தொடக்கம் கல்வி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.

இதன் கீழ் கல்வி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட உயரிய சந்தைக் கேள்வி மற்றும் தொழில்சார் பெறுமதி கொண்ட பட்டப் பாடநெறியினைத் தொடர்வதற்காக அரசாங்கத்தினால் வட்டியற்ற கடன் நிதியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் மாணவர்களின் மேலதிக செலவினத்திற்காக அவர்களின் விருப்பத்திற்கமைய 300,000 ரூபா உயர்ந்தபட்சத்தின் கீழ் வட்டியற்ற கடன் நிதியும் வழங்கப்படுகின்றது. வட்டி அரசாங்கத்தினால் செலுத்தப்படுவதுடன் பெற்றுக் கொண்ட கடன் நிதியை பட்டத்தை 03 அல்லது 04 ஆண்டுகள் தொடர்ந்து அதனை அடுத்து எழும் ஒரு (01) வருடகால சலுகைக் காலத்திற்குப் பின்னர் தொடராக 7 ஆண்டுகள் அல்லது 8 ஆண்டுகளில் செலுத்தி முடிக்க முடியும்.

வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்திற்கு விண்ணப்பித்தல் மற்றும் பதிவு செய்யும் செயற்பாடுகள் இணைத்தளம் ஊடாக மேற்கொள்வது கட்டாயத் தேவையாகும். நவீன மென்பொருள் முறைமை ஊடாக மாணவர்களுக்கு அவர்கள் மிகவும் விருப்பத்தைக் காண்பிக்கும் நிறுவனத்தில் பாடநெறியைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்திற்காக இணைய எதிர்பார்க்கும் சகல மாணவர்களும் தாம் இணையத்தளம் ஊடாக விண்ணப்பப்படிவங்களை நிரப்புவதற்கு முன்னர் இக் கையேட்டினை சிறந்த முறையில் வாசிக்குமாறு வலியுறுத்தப்படுகின்றது. இதனைச் சரியாக மற்றும் கவனமான மேற்கொள்ளாத மாணவர்கள் தாம் மிகவும் விரும்பக்கூடிய நிறுவனம் மற்றும் பாடநெறியினை தவறவிடக் கூடிய சந்தர்ப்பங்களை எமக்கு அனுபவ ரீதியாகக் காண முடிந்துள்ளது.

# பகுதி 1

**வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் முதலாவது பட்டப் பாடநெறியினைத் தொடர்வதற்காக முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகள் மற்றும் சட்ட ஒழுங்கு விதிமுறைகள்**

### 1.1 அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களுக்கான பிரவேசக் கொள்கை

வட்டியற்ற மாணவர் கடன் யோசனை வேலைத்திட்டத்திற்காக இணையும் பட்டம் வழங்கும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து பட்டப் பாடநெறி மாத்திரம் தொடர்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது. உரிய பாடநெறிக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது அவர்களினால் பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் மற்றும் அதற்காக அவர்கள் வழங்கும் முன்னுரிமை, கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை, உரியதாக பட்டம் வழங்கும் நிறுவனங்களினால் வழங்கப்படும் ஆசன **அளவுகளும், இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகிய இரண்டு அரச வங்கிகளினாலும் வழங்கப்படும் கடன் தொகையும் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது**. ஏதேனும் ஒரு காரணத்திற்கமைய அவ்வவ் பாடநெறிகளுக்காக கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை உரிய நிறுவனங்களின் ஆசனக் கொள்ளளவினைத் தாண்டும் வேளையில் க.பொ.த (உ.த) பரீட்சையில் விண்ணப்பதாரர்களினால் பெற்றுக் கொண்ட Z புள்ளிகளின் சாதாரணத்திற்கமைய காணப்படும் தகைமைத் தொடருக்கமைய தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.2 பிரவேசிப்பதற்கான குறைந்தபட்ச தகைமை

2024/2025 கற்கை ஆண்டுக்குரியதான அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் பிரவேசத்திற்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்காகத் தோற்றி பல்கலைக்கழக பிரவேசங்களுக்குத் தகைமை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் இவ் யோசனைத் திட்டத்தின் கீழ் தகைமை கொண்டவர்களாக கருதப்படுவர்.

விண்ணப்பதாரிகள்:

(i) *ஒரே தடவையில் மற்றும் மூன்று தடவைகளுக்கு மேற்படாது அனைத்து மூன்று பாடங்களுக்காகவும் சாதாரண (S) சித்தியை பெற்றிருத்தல் வேண்டும், மற்றும்,*

(ii) *மூன்று தடவைகளுக்கு மேற்படாது எந்த அமர்விலும் சாதாரண பொதுப் பரீட்சைக்கு குறைந்த பட்சம் 30 புள்ளிகளை பெற்றிருத்தல். (*நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் நேரத்தில் உரிய பெறுபேறுகள் வெளியிடப்பட்டு இருக்க வேண்டும்*), மற்றும்*

(iii) *க. பொ.த (உயர் தர) பரீட்சையில் பொது ஆங்கிலத்தில் சாதாரண (S) சித்தி அல்லது க. பொ.த (சாதாரண தர) ஆங்கிலத்தில் சாதாரண (S) சித்தி, மற்றும்*

(iv) விண்ணப்பதாரியின் வயது 2025 **பிப்ரவரி** 22 ஆம் திகதியன்று *வயது* 25 *அல்லது அதற்கு கீழ்ப்பட்டதாக* இருத்தல் *வேண்டும்.*

## 1.3 இணைப்புப் பாடநெறிகள்

தமது பாடவிதானத்தினை தகவல்கள் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப பாடவிதானத்திற்கு மாற்றுவதற்கு விருப்பமான மாணவர்கள் உரிய பாடவிதானத்தில் தோச்சியினை பெற்றுக் கொள்வதற்காக இணைப்புப் பாடநெறியினை தொடர வேண்டும்.

***கணினி விஞ்ஞானம் /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) இற்கான இணைப்பு கற்கை நெறிகள்***

I. **Foundational Mathematics (60 direct contact hours – 4 credits)**
II. **Computational Thinking (60 (30T+30P) direct contact hours – 3 credits)**
III. **English and Communication Skills (30 direct contact hours – 2 credits)**

தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் / தகவல் முறைமை / மென்பொருள் பொறியில் ஆகிய பாடநெறிகளை தொடர்வதற்காக அடிப்படைத் தகமைகளை நிவர்த்தி செய்வதற்காக அனைத்துப் பாடடங்களிலும் சித்தியடைந்து இருக்க வேண்டும்.

***மற்றும்***

கணணி விஞ்ஞான பாடநெறயினைத் தொடர்வதற்காக அடிப்படைத் தகமைகளை நிவர்த்தி செய்வதற்காக அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்து இருக்க வேண்டியதுடன் (50% குறைந்தபட்ச புள்ளி விகிதாரசாரத்துடன்) மேற்கூறப்பட்ட Foundational Mathematics பாடத்திற்காக குறைந்த படசம் 70% புள்ளிகளைப் பெற்றிருத்தல்.

***எரேனும் விண்ணப்பதாரி க.பொ.த (உ/த) தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப பாடம் (ICT) இற்காக சாதாரண சித்தி (s) பெற்றிருப்பின் இணைப்புப் பாடநெறியில் இருந்து விடுவிக்க முடியும்.

| குறிப்பு : |
|---|
| **ஒரு அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகத்தில் இணைப்பு பாடநெறியினை தொடர்வதன் மூலம அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவக பட்டப் பாடநெறியினை தொடர்வதற்காக தேவையான அடிப்படை தகமைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும்.** |

**1.3.1 இணைப்புப் பாடநெறியினைத் தொடர்வதற்காக வசதிகளை வழங்கும் அரச சார்பற்ற கல்வி நிறுனங்கள்.**

| நிறுவத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் | தொலைபேசி இலக்கம் | பாடநெறிக் கட்டணம் (Rs.) |
|---|---|---|---|
| SLIIT | திருமதி சமினி வீரக்கொடி | 011 754 3392 | 25,000/= |
| CINEC | திருமதி றுவனி கருணாதாச | 076 9442866 | 50,000/= |
| HORIZON | திரு சஞ்ஜீவ குறுப்பு | 071 1175175 | 25,000/= |
| KIU | திரு சவிந்து இசாரா | 076 7334744 | 100,000/= |
| SLTC | திரு அசித விஜயவர்தன | 071 140 5836 | 20,000/= |
| SAEGIS | திருமதி தறுசி பிரமோத்யா | 071 140 5836 | 40,000/= |
| ESOFT | திரு ரஹ்மான் | 077 2927874 | 20,000/= |
| ICBT | திரு ரஜித துனுவில | 077 1786 658 | 30,000/= |
| BCI | திருமதி சசிகலா அல்விஸ் | 077 1200588 | 20,000/= |
| NIIBS | போரசிரியர் ஆர். வேரவத்த | 0112 904 666 | 25,000/= |

## 1.4 1978 இலக்கம் 16 கொண்ட பல்கலைக்கழக சட்டம் (இடைக்கிடையே மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனத்திற்காக பிரவேசிப்பதற்குரியதான ஒப்பளவுகள்

1. சகல மாணவர்களுக்கும் அரச ஒதுக்கீட்டின் கீழ் உயர் கல்விக்காக ஒரு சந்தர்ப்பம் மாத்திரம் உரித்தாகின்றது.
2. அங்கீகரிக்கப்பட்ட அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முழு நேரப் பாடநெறியினை மாத்திரம் இதன் கீழ் தொடர்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.
3. அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தில் மாத்திரம் இப்பாடநெறியினைத் தொடர வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
4. 1978 இலக்கம் 16 கொண்ட பல்கலைக்கழக சட்டம் (இடைக்கிடையே சீர்திருத்தம்) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மாணவர் கடன் யோசனைத் திட்டத்திற்கு சேர்க்கப்பட்ட அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்கள் கீழ்வே குறிப்பிடப்பட்டுள்ளன.

i. ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியுட் ஒப் இன்பர்மேசன் டெக்னோளஜி (கரன்டி) லிமிட்டட் நிறுவனம் - SLIIT (மாலபே பிரதான கிளை மற்றும் மாத்தறை கிளை).

ii. தேசிய வர்த்தக முகாமைத்துவ பாடசாலை – NSBM

iii. சினெக் கெம்பஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவகம் - CINEC
iv. இலங்கை பௌத்த கற்கை நிறுவனம் - SIBA
v. இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம் - ICASL
vi. ஹொரைசன் கல்லூரி ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னோளஜி லிமிட்டட் - HORIZON
vii. KIU கம்பஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவகம் - KIU
viii. எஸ்.எல்.ரி. கெம்பஸ் (பிரைவட்) லிமிட்ட நிறுவகம் - SLTC
ix. சீகிஸ் கெம்பஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனம் - SAEGIS
x. ஈசொப்ட் மொட்ரோ கம்பஸ் - ESOFT
xi. அக்வய்னஸ் உயர் கல்வி விஞ்ஞான நிறுவகம். – AQUINAS
xii. இன்ஸ்டிடியூட் ஒப் கெமிஸ்ட்ரி சிலோன் – ICHEM
xiii. இன்டர் நெசனல் கொலேஜ் ஒப் பிஸினஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடட் – ICBT (கொழும்பு பிரததன கிளை மற்றும் கண்டி கிளை)
xiv. பெனடிக் கெதலிக் இன்ஸ்டிடியூட் ஒப் ஹயர் எடுகேசன் பிரைவட் லிமிட்டட்– BCI
xv. *றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிரைவேட்) லிமிட்டெட்* – RIC
xvi. *நாகாநந்தா சர்வதேச பௌத்த கற்கைகள் நிறுவனம்* – NIIBS
xvii. வர்தக முகாமைத்துவ கல்லூரி - BMS

மேலே கூறப்பட்ட அரச சார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவனங்களில் முதலாவது பட்டப் பாடநெறிக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை இக் கையேட்டில் விபரிக்கப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்கு விதிமுறைகள் அரசாங்கத்தினால் அல்லது கல்வி அமைச்சினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய மாற்றமடையக்கூடும்.

### 1.5 வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் பிரவேசிப்பதற்காக தகைமை பெறாதிருப்பதற்கான காரணங்கள்

i. கல்விப் பொதுத் தராதர (உ.்.த) பரீட்சைக்கு மூன்று தடவைக்கு மேற்பட்ட அளவு தெற்றியுள்ள மாணவர்கள், எவரேனும் விண்ணப்பதாரிக்கு அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனத்திற்கு பிரவேசிப்பதற்காக தகைமை பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு தோற்றக்கூடிய மூன்று சந்தர்ப்பங்களுக்கு இணைவான வாய்ப்பாக அல்லது அவ்வாறு இன்றேல் தேற்ற முடியும். இருப்பினும் இறுதியில் தமது மூன்று வாய்ப்புக்களை பூர்த்தி செய்ததன் பின்னர் அதற்குப் பின்னைய வருடத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் விண்ணப்பிக்க முடியாது.

ii. இவ் வேலைத்திட்டத்திற்காக கருத்திற் கொள்ளப்படுவது (2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில்) பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய அல்லது அதற்கு முன்னைய ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சைப் பெறுபேறு 1978 இலக்கம் 16 கொண்ட பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழுள்ள அரச பல்கலைக்கழகம் ஒன்றில் உள்ளக மாணவராக முதற் பட்டத்தைத் தொடர்வதற்காக ஏற்கனவே தெரிவாகி அல்லது பதிவு செய்துள்ள விண்ணப்பதாரியாக இருத்தல்.

iii. இவ் வேலைத்திட்டத்திற்காக கருத்திற் கொள்ளப்படும் (2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில்) அதற்கு முன்னைய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சைப்

பெறுபேறுகள் ஏனைய இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரச உயர் கல்வி நிறுவன மொன்றில் உள்ளக மாணவராக முதலாவது பட்டத்தைத் தொடர்வதற்காக ஏற்கனவே தெரிவாகியுள்ள விண்ணப்பதாரராக இருத்தல்.

iv. கல்வி அமைச்சின் கீழ் காணப்படும் கல்வியியற் கல்லூரி (College of Education) உள்ளக மாணவராக டிப்ளோமாப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஏற்கனவே தெரிவாகியுள்ள விண்ணப்பதாரராக இருத்தல்.

v. இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகம் (SLIATE) இன் கீழ் காணப்படும் நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறி அல்லது தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபை (NAITA) இன் கீழ் உள்ள பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் நடாத்தப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (NDES) பாடநெறி ஆகிய பாடநெறிகளில் இரண்டு வருடங்கள் அல்லது அதனை விட மேற்பட்ட காலம் முழு நேரப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஏற்கனவே தெரிவாகியுள்ள விண்ணப்பதாரராக இருத்தல்.

vi. தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக நிறுவனம் (University College) இன் மூலம் நடாத்தப்படும் இரண்டு ஆண்டு காலத்தைவிட மேற்பட்ட காலம் டிப்ளோமா பாடநெறியினைத் தொடர்வதற்காக உள்ளக மாணவராகப் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரராக இருத்தல்.

vii. பொது நிதியத்தின் மூலம் முழு நேரம் அல்லது பகுதி அடிப்படையில் நிதி வழங்கும் ஏனைய டிப்ளோமா அல்லது பட்டப் பாடநெறி வேலைத்திட்டத்திற்காக தெரிவாகி / பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரராக இருத்தல்.

viii. கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் எந்தவொரு வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழும் முதலாவது பட்டப் பாடநெறியினை தொடர்வதற்காக ஏற்கனவே தெரிவாகியுள்ள/பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரியாக இருத்தல்.

ix. வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்துடன் தொடர்புபட்டுள்ள அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் முழு நேர டிப்ளோமா அல்லது பட்டப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியாக இருத்தல்.

x. மேற்கூறப்பட்ட iii தொடக்கம் viii வரையான வாசகங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி நிறுவனமொன்றில் ஏற்கனவே முதலாவது பட்டம் அல்லது உரிய தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரராக இருத்தல்.

xi. அரச சார்பற்ற உயர் கல்விப் பிரவேசம் மற்றும் அதன் பதிவிற்காக போலித் தகவல்களை வழங்கும் மற்றும் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரராக இருத்தல்.

**கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் :**

ஏதேனும் அடிப்படையில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் உயர் கல்வி நிறுவனப் பிரவேசம் அல்லது பதிவிற்காக விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரரினால் வழங்கப்பட்ட தகவல்கள் சரியானது அல்லது போலியானது எனத் தெரியவரும் பட்சத்தில் அவ் விண்ணப்பதாரியை உரிய உயர் கல்வி நிறவனத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 1.6. உயர்ந்த பட்ச கடன் எல்லை

**1.6.1 வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் நான்கு ஆண்டுகளுக்கு (4) பட்டப் பாடநெறியினைத் தொடர்வதற்காக உயர்ந்பட்ச கடன் நிதி.**

| | பாடவிதானம் | உயர்ந்த பட்ச கடன் நிதி (ரூபா) |
|---|---|---|
| 1 | *மானிட சாஸ்திர மற்றும் சமூக விஞ்ஞானம்* | 800,000 |
| 2 | முகாமைத்துவ மற்றும் வர்த்தகம் | 900,000 |
| 3 | விஞ்ஞானம் (Biological/Bio Medical( | |
| | i. விஞ்ஞானம் (இரசாயண.உயிரியல் விஞ்ஞான/ உயிரியல் வைத்திய) | 1,200,000 |
| | ii. விஞ்ஞானம் (பௌதீக) | 1,000,000 |
| 4 | பேறியியல் தொழில்நுட்பம் | |
| | i. பொறியிய் | 1,500,000 |
| | ii. உயிரியல் தொழில்நுட்பம் | 1,000,000 |
| | iii. பொறியியல் தொழில்நுட்பம் | 1,000,000 |
| 5 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம் | |
| | i. கணணி விஞ்ஞானம் | 800,000 |
| | ii. விஞ்ஞானமானி | 1,000,000 |

**1.6.2** **வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் மூன்று ஆண்டுகள் (03) பட்டப் பாடநெறியினை தொடர்வதற்காக உயர்ந்தபட்ச மாணவர் கடன்.**

| | பாடவிதானம் | உயர்ந்தபட்ச கடன் நிதி (ரூபா) ( |
|---|---|---|
| 1 | ***மானிட சாஸ்திர மற்றும் சமூக விஞ்ஞானம்*** | 600,000 |
| 2 | முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் | 600,000 |
| 3 | பொறியியல் தொழில்நுட்பம் | 800,000 |
| 4 | தகவல் மற்றும் தொடர்புசாதான தொழில்நுட்பம் | |
| | iii. கணணிமானி | 600,000 |
| | iv. விஞ்ஞானமானி | 800,000 |

### 1.7 வட்டி இல்லா மாணவர் கடன் யோசனைத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய ஏனைய முக்கியமான விடயங்கள்

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுடன் தொடர்புடைய விதிகள் மற்றும் விதிமுறைகளை உள்ளடக்கிய ஒப்பந்தத்திற்கு உடன்பட வேண்டும்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கடன் வசதியை வழங்கும் இலங்கை அரசு வங்கியுடன் கடன் ஒப்பந்தத்திற்கு உடன்பட வேண்டும்.

3. இக் கடன் யோசனைத் திட்டம் ஊடாக வங்கியினால் கடன் நிதி அங்கீகரிக்கப்படும் சந்தர்பத்தில் மாணவரின் தாய் / தந்தை முதலாவது பிணையாளராக கொள்வதற்கும் தாய் அல்லது தந்தை இல்லாத சந்தர்பத்தில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் பரிந்துரைக்கு அமைய அண்மித்த முதலாவது பிணையாளராக கொள்வதற்கும் வங்கியினால் விண்ணப்பிற்கக் கூடியவாறு வருமானம் கொண்ட ஒருவர் இரண்டாவது பிணையாளராக பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. வட்டி இல்லாத மாணவர் கடன் திட்டத்தின் கீழ் மொத்த கடன் காலம் 12 ஆண்டுகளாகும். 4 ஆண்டு பட்டப்பாடப் நெறிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு, 4 ஆண்டு படிப்புக் காலம் மற்றும் ஒரு வருட சலுகைக் கால அவகாசத்திற்குப் பிறகு 7 ஆண்டுகளுக்குள் (சமனான 84 தவணைகளில்) கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். 3 ஆண்டு பட்டப்பாடப் நெறிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு, 3 ஆண்டு படிப்புக் காலம் மற்றும் ஒரு வருட சலுகைக் கால அவகாசத்திற்குப் பிறகு 8 ஆண்டுகளுக்குள் (சமனான 96 தவணைகளில்) கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இந்த முழுமையான 12 வருட காலப்பகுதியினுள் கடனுக்கான வட்டியை அரசாங்கத்தினால் இலங்கை வங்கிக்கு திருப்பிச் செலுத்தப்படும்.

5. சம்பந்தப்பட்ட மாணவர் சார்பாக, கல்வி அமைச்சின் பரிந்துரைக்கேற்ப, ஒவ்வொரு அரை ஆண்டு பாட காலத்தின் தொடக்கத்திலும், அரை ஆண்டு பாடநெறி (Semester Basis) கட்டணத்தினை தொடர்புடைய வங்கியினால் மாணவர் படிக்கும் சம்பந்தப்பட்ட அரசு சாரா உயர்கல்வி நிறுவனத்திற்கு செலுத்தப்படும்.

6. சம்பந்தப்பட்ட மாணவர், 4 ஆண்டு கால பட்டப்பாடப் நெறியிற்கு தேர்வு செய்யப்பட்டால், பாடநெறி கட்டணத்தை முடிப்பதற்கு அதிகபட்ச கடன் தொகை ரூ. 800,000 மற்றும் 3 ஆண்டு கால பட்டப்பாடப் நெறியிற்கு, அதிகபட்சமாக ரூ. 600,000 கடன் தொகையும் வழங்கப்படும்.

7. இதற்கு மேலதிகமாக, கல்வியியல் காலத்தில் மேலதிக செலவுகளை ஈடு செய்து கொள்ள மாணவர்க்கான உதவிக் கடன் தொகையினைப் பெற விரும்பினால், வருடத்திற்க்கு ரூ. 75,000 வட்டி இல்லாத கடனுக்கு விண்ணப்பிக்க விண்ணப்பதாரருக்கு வாய்ப்பு கிடைக்கும். அதன் படி, 4 ஆண்டு கால பட்டப்பாடப் நெறியினை படித்து வந்தால், அதிகபட்சமாக ரூ. 300,000 கடனும், 3 ஆண்டு கால பட்டப்பாடப் நெறியினை படித்து வந்தால், அதிகபட்சமாக ரூ. 225,000 கடனும் பெறலாம்.
இந்த கடன் தொகை தொடர்புடைய பாட நெறி கட்டணத்துடன் சேர்க்கப்படும். பாடநெறி கட்டணத்துடன் தொடர்புடைய கடன் தொகை மற்றும் உதவிக் கடன் தொகை ஆகிய இரண்டிற்குமுரிய கடன் தொகையானது அரசினால் இலங்கை வங்கிக்கு செலுத்தப்படுகின்றது. எனவே, அந்த கடன் தொகை திருப்பி செலுத்தப்படுவதானது, பாடநெறிக் கட்டணம் திருப்பி செலுத்தப்படுவதை போன்றதாகும்.

8. மேற் குறிப்பிட்ட உதவிக் கடன் தொகையானது கல்வி அமைச்சின் பரிந்துரையுடன், ரூ. 6,250 அடிப்படையில் காலாண்டிற்கு தலா ரூ. 18,750 என்றவாறு மாணவருக்கு வழங்கப்படுவதோடு, இந்த தொகையினைப் பெற்றுக்கொள்ள இலங்கை வங்கியினால் வழங்கப்படும் வவுச்சரில் கையொப்பமிட வேண்டும்.

9. இந்த திட்டத்தின் கீழ் வசதிகளை பெறுகின்ற ஒவ்வொரு மாணவரும், ஒவ்வொரு கல்வியியல் பாடத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு கிரெடிட் பாஸ் ("C" தேர்ச்சி) பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், 80% வருகையை உறுதி செய்ய கொள்ள வேண்டும்.

10. ஏதாவதொரு பாடத்தில் மாணவர் சித்தியடைய்யவில்லையென்றால், அவர் அந்த கல்வியாண்டின் அடுத்த அரை ஆண்டு பாட நெறி காலத்திலோ அல்லது நெருங்கிய கல்வியாண்டிலோ அந்த பாடத்திற்கு மீண்டும் தோற்றி தேர்ச்சி பெற வேண்டும். தேர்வின் மறு அமர்வின் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் மாணவரால் செலுத்தப்பட வேண்டும்.

11. மாணவர் ஒருவர் தமது தனிப்பட்ட காரணத்திற்காக பாடநெறியினை தொடரும் போது அப் பாடநெறியினை பூர்த்திசெய்வதற்கு தவறும் பட்சத்தில் அவரினால் அப் பாடநெறியினை இடைநிறுத்தும் வரை வங்கியினால் செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பாடநெறிக் கட்டணம் மற்றும் மாணவர் கடன் நிதி ஆகிய முழுமையான கடன் நிதியினை செலுத்தி முடிக்கும் திமன்று உரிய வட்டியுடன் ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் மாணவரின் பெயா் இலங்கை கடன் தகவல் பணியகத்தில் கடனை செலுத்தாத அல்லது கடன் செலுத்தத் தவறியா்களின் பெயா்கள் கொண்ட கறுப்புப்பட்டியல் (CRIB) இல் உள்ளடக்கப்படும். மேலும் மாணவா் பட்டத்தினை பூர்த்தி செய்யததன் பின்னா் கடனை மீள செலுத்த தவறினால் அவரின் பெயா் மற்றும் பிணையாளரின் பெயா் இலங்கை கடன் தகவல் பணியகத்தில் கடன் செலுத்துவதனை தவறியவா்களின் பெயா்களைக் கொண்ட கறுப்புப் பட்டியல் (CRIB) இல் உள்ளடக்கப்படும்.

12. படிப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பட்டப்படிப்பை சம்பந்தப்பட்ட காலத்திற்குள், அதாவது 3 அல்லது 4 ஆண்டுகளுக்குள் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்ய வேண்டும்.

13. பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்த பின்னர் பொருத்தமான வேலையைத் தேடிப் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு மாணவர்களுக்கு உள்ளது. எவ்வாறாயினும், இந்த வட்டி இல்லாத கடன் திட்டத்தின் கீழ் வெளிவரும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு, சம்பந்தப்பட்ட அரசு சாரா பட்டப்படிப்பு வழங்கும் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு உருவாக்கும் தொழில்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

14. தகைமைகளை பூர்த்தி செய்து பட்டப்படிப்பினை முடித்த பட்டதாரிகள் அரசு மற்றும் தனியார் துறை வேலை வாய்ப்புகளுக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

15. மாணவருக்கு வெளிநாடு செல்வதற்கு அவசியமாயின் அவரின பெற்றுக் கொண்ட முழுமையான கடன் நிதியினை ஒரே தடவையில் செலுத்த வேண்டும்.

16. மாணவரினால் பெற்றுக் கொண்ட கடனை மீள தீர்ப்பதற்காக இலங்கை வங்கியுடன் எட்டப்பட்டுள்ள உடண்படிக்கைக்கு அமைய செயற்பட வேண்டும்.

**மேற்பார்வை**

வட்டியில்லாத மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் செயற்பாடுகளை முழுமையாக மேற்பார்வை செய்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு செயற்பாடுகளை மேற்கொள்வது கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, நிதி பொருளாதார, நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**பட்டம் சான்றிதழ்**

பட்டப்படிப்பு திட்டத்தை வெற்றிகரமாக முடித்தவுடன், கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்ட சான்றிதழ் மாணவர் பதிவுசெய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தால் மாணவருக்கு வழங்கப்படும

# பகுதி 2

**அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் முதலாவது பட்டப் பாடநெறியிற்கு பிரவேசிப்பதற்காக தயார்படுத்தப்பட வேண்டிய முறைகள் தொடர்பான முக்கியமான ஆலோசனைகள்**

## 2.1 மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் தொடரக்கூடிய கற்கைப் பாடநெறிகள்

அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்கள் மூலம் மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் தொடர முடியுமான பாடநெறிகள் (05) பாடவிதானங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. மானிட மற்றும் சமூக விஞ்ஞானப் பாடவிதானம்
2. வர்த்தகப் பாடவிதானம்
3. உயிரியல் விஞ்ஞானப் பாடவிதானம்
4. பொறியியல் தொழில்நுட்பவியல் பாடவிதானம்
5. கணினி பாட விதானம்

## 2.2 அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் கல்விப் பாடநெறிகளுக்காக மாணவர்களை இணைப்புச் செய்யும் அடிப்படை

2024/25 கல்வி ஆண்டில் பல்கலைக்கழக பிரவேசத்திற்காக தகைமைபெற்ற விண்ணப்பதாரி அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனத்தில் கற்கைப் பாடநெறியினைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்கும் செயற்பாடுகள் கீழ்க் குறிப்பிட்ட அடைவு மட்டங்களுக்கமைய மேற்கொள்ளப்படும்.

I. 1.2 பிரிவில் வெளிப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச தகைமையினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மற்றும் 2.5 பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறி வேலைத்திட்டம் கருத்திற் கொள்ளப்படும்.

II. Z புள்ளி மூலம் அளவீடு செய்யப்படும் அகில இலங்கை திறமையினை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும்.

III. அவ்வவ் விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு வட்டியற்ற மாணவர் யோசனைக் கடன் திட்டத்தின் கீழ் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் அந்நிறுவனங்களின் கீழ் தொடர முடியுமான பட்டப் பாடநெறி வேலைத்திட்டத்திற்காக விருப்பத்தை எந்த சந்தர்ப்பத்திலும் வெளியிட முடியும்.

IV. விண்ணப்பதாரர்களின் விருப்பம் மற்றும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் ஆசனக் கொள்ளளவினை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

V. விண்ணப்பதாரர்களில் முதலாவது விருப்பம் கொண்ட பாடநெறி வேலைத்திட்டத்தில் உயரிய முன்னுரிமை வழங்கப்படுவதுடன் அதற்காக விண்ணப்பதாரி தகைமை பெறாதிருப்பின் அடுத்ததாக அவர் வழங்கியுள்ள விருப்பத் தொடருக்கமைய தேர்ந்தெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

2.3 இதற்கமைய வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் அவ்வவ் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படும் பட்டப் பாடநெறிகள், பாடநெறிக் கால எல்லைக்குள் பாடநெறிக் கட்டணம் மற்றும் பாடநெறியினைத் தொடர்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

2.3.1 மானிட வள மற்றும் சமூக விஞ்ஞானப் பாடவிதானம்

| | நிறுவனத்தின் பெயர் | வழங்கப்படும் பட்ட வேலைத்திட்டம் | கால எல்லை | பாடநெறிக் கட்டணம் | பதிவு செய்வதற்கான குறைந்தபட்ச தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | SLIIT | **AHSS01**- ஆங்கிலம் தொடர்பான கல்விமானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடவிதானத்தில் (ஆங்கிலம் பிராதான பாடங்கள் மூன்றில் ஒன்றாக இருக்க வேண்டும்) 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். மற்றும் கல்விப் பொதுத் தராதர பத்திர சாதரணதரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக குறைந்த பட்சம்) 03 சாதாரண "S" சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 2 | | **AHSS20** - சமூக விஞ்ஞானத்தில் கல்விமானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | கல்விப் பொதுத் தர (உயர் தர) பரீட்சையில் வணிகம் அல்லது கலைப் பிரிவுகளில் ஒரே நேரத்தில் பெறப்பட்ட மூன்று (3) "S" சித்திகளும்இ கல்விப் பொதுத் தர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிஇ கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறைந்தபட்சம் மூன்று (3) "S" சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 3 | NSBM | **BHSS04** - வர்த்தக தொடர்பு சாதனம் தொடர்பான கலைப் பட்டம் | 03 ஆண்டுகள் | 600,000 | கல்விப் பொதுத் தரச் சான்றிதழ் (உயர் தர) தேர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் மூன்று (3) "S" சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும். **மற்றும்** கல்விப் பொதுத் தரச் சான்றிதழ் (உயர் தர) தேர்வில் ஆங்கிலத்தில் குறைந்தபட்சம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | "S" சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.<br>**மற்றும்**<br>கல்விப் பொதுத் தரச் சான்றிதழ் (சாதாரண தர) தேர்வில் ஆங்கில மொழியில் குறைந்தபட்சம் "B" சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 4 | **CINEC** | **DHSS06** - ஆங்கிலம் தொடர்பான கல்வி மானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் ஒரு பாடவிதானத்தில் (ஆங்கிலம் பிரதான பாடங்கள் மூன்றில் ஒன்றாக இருக்க வேண்டும்) 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். மற்றும் கல்விப் பொதுத் தராதர பத்திர சாதரணதரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக குறைந்த பட்சம்) 03 சாதாரண "S" சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 5 | | **DHSS08** - பௌதீக விஞ்ஞானம் தொடர்பான கல்விமானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் இணைந்த கணிதம், உயர் கணிதம் அல்லது இரசாயன விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம், கணிதம் ஆகிய பாடங்களில் 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். மற்றும் கல்விப் பொதுத் தராதர பத்திர சாதரணதரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக குறைந்த பட்சம் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 6 | | **DHSS09** - தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கல்விமானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். மற்றும் கல்விப் பொதுத் தராதர பத்திர சாதரணதரப் பரீட்சையில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | CINEC | DHSS07 - உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான கல்வி மானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | சிங்களம் அல்லது தமிழ் மொழியில், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக குறைந்த பட்சம் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல் |
| | | | | | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், இரசாயண விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்கிளில் ஒரே தடவையில் 03 "S" சித்திகளைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதர பத்திர சாதரணதரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக குறைந்த பட்சம் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல் |
| 8 | | DHSS21 - விளையாட்டு மற்றும் உடற்கல்வியில் கல்வி மானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் மூன்று (03) "S" சித்திகளையும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் "S" சித்தியையும் பெற்றிருக்க வேண்டும். ஆத உடன்<br><br>பள்ளி, பிராந்திய, தேசிய, மாகாண அல்லது சர்வதேச அளவில் விளையாட்டு சாதனைகளைப் பெற்றிருக்க வேண்டும். |
| 9 | | DHSS22 - முன்பிள்ளைப்பருவ கல்வியில் கல்வி மானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் மூன்று (03) "S" சித்திகளும்இ க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிஇ கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட குறைந்தபட்சம் ஆறு "S" சித்திகளைப் பெற்றிருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | CINEC | **DHSS15 -** ஆங்கிலத்தில் கல்விமானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் ஒன்றாக ஆங்கிலம் உட்பட ஏதேனும் மூன்று பாடங்களில் மூன்று (03) "S" சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 11 | | **DHSS05 -** ஆங்கிலத்தில் கலைமானிப் பட்டம் | 03 ஆண்டுகள் | 600,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் மூன்று (03) 'S' சித்திகளும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்திற்கு குறைந்தபட்சம் 'C' சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 12 | HORIZON | **GHSS13** - உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான கல்வி மானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், இரசாயண விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்கிளில் ஒரே தடவையில் மூன்று "S" சித்திகளைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விப கல்விப் பொதுத் தராதர பத்திர சாதரணதரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக குறைந்த பட்சம் "S" சித்திகளைப் பெற்றிருத்தல் |
| 13 | | **GHSS23** - தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கல்வி மானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் மூன்று (03) "S" சித்திகளும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறைந்தபட்சம் "S" சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 14 | **AQUINAS** | **KHSS24 -** ஆங்கிலம் தொடர்பான கல்வி மானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் மூன்று (03) 'ள' சித்தி ('ஆங்கிலம்' என்பது முக்கிய மூன்று பாடங்களில் ஒன்றாக இருக்க வேண்டும்) மற்றும் க.பொ.த. சாதாரண தரத்தில் சிங்களம் அல்லது தமிழ் மொழிஇ கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மொழிகளில் குறைந்தபட்சம் "S" சித்திகளைப் பெற்றிருத்தல். |
| 15 | **AQUINAS** | **KHSS17** - உளவியல் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான விஞ்ஞான கலைமானிப் பட்டம் | 03 ஆண்டுகள் | 600,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் மூன்று (03) "S" சித்திகளும்இ க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிஇ கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறைந்தபட்சம் "S" பெற்றிருத்தல். |
| 16 | **KIU** | **HHSS19 –** உளவியலில் விஞ்ஞானமானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் மூன்று (03) 'S' சித்திகளும், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தபட்சம் "S" சித்தியும் பெற்றிருத்தல். |
| 17 | **SEAGIS** | **JHSS29-** ஆங்கிலத்தில் கலைமானிப் பட்டம் | 03 ஆண்டுகள் | 600,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் மூன்று (03) 'S' சித்திகளும், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தபட்சம் "C" சித்தியும் பெற்றிருத்தல். |
| 18 | **BCI** | **NHSS26 -** ஆரம்பக் கல்வி தொடர்பான கல்வி மானி கௌரவ | 04 ஆண்டுகள் | 800,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் மூன்று (03) 'S' சித்தியும், ஆங்கில மொழியில் குறைந்தபட்சம் "C" சித்தியும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதத்தில் குறைந்தபட்சம் "S" சித்தியும் பெற்றிருத்தல். |
| 19 | | **NHSS27 -** முன்பிள்ளை பறுவ கல்வி தொடர்பான கல்வி மானி கௌரவ | 4 years | 800,000 | க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் மூன்று (03) 'S' சித்தியும், ஆங்கில மொழியில் குறைந்தபட்சம் "C" சித்தியும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதத்தில் குறைந்தபட்சம் "S" சித்தியும் பெற்றிருத்தல். |

2.3.2 **வர்த்தகப் பாடவிதானம்**

| | **நிறுவனத்தின் பெயர்** | **வழங்கப்படும் பட்ட வேலைத்திட்டம்** | **கால எல்லை** | **பாடநெறிக் கட்டணம்** | **பதிவு செய்வதற்கான குறைந்தபட்ச தகைமைகள்** |
|---|---|---|---|---|---|
| | **SLIIT** | **ACOM01** - வர்த்தக நிருவாகமானி (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 2 | **NSBM** | **BCOM02 -** கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவ (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல் **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் "C" சித்தியினைப் பெற்றிருத்தல் **மற்றும்** கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் (ஆங்கில பாடத்திற்காக குறைந்த பட்சம் "S சித்தியினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் (ஆங்கில மொழியிற்காக குறைந்த பட்சம் "C" சித்தியைப் பெற்றிருத்தல். |
| 3 | | **BCOM17 –** வர்த்தக நிருவாக தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் (செயற்திட்ட முகாமைத்துவ நிபுணர்) | 04 ஆண்டுகள் | 800,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல் **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஆங்கிலம் பாடத்தில் குறைந்த பட்சம் "S" சித்தியினைப் பெற்றிருத்தல் **மற்றும்** கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் (ஆங்கில பாடத்திற்காக குறைந்த பட்சம் "S சித்தியினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் (ஆங்கில மொழியிற்காக குறைந்த பட்சம் "C" சித்தியைப் பெற்றிருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | **NSBM** | **BCOM39 –** சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகளில் வியாபார முகாமைத்துவ (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல் **மற்றும்** கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் (ஆங்கில பாடத்திற்காக குறைந்த பட்சம் “S சித்தியினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் (ஆங்கில மொழியிற்காக குறைந்த பட்சம் “C” சித்தியைப் பெற்றிருத்தல். |
| 5 | | **BCOM45** வர்த்தக முகாமைதத்துவ விஞ்ஞானம் தொடர்பான பட்டம் (மானிட வள முகாமைத்துவம்) | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் (ஆங்கில பாடத்திற்காக குறைந்த பட்சம் “S சித்தியினைப் பெற்றிருத்தல் மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் (ஆங்கில மொழியிற்காக குறைந்த பட்சம் “C” சித்தியைப் பெற்றிருத்தல். |
| 6 | **ICASL** | **CCOM03** - பிரயோகக் கணக்கியல் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் (விசேட) | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல். |
| 7 | | **CCOM04** - பிரயோகக் கணக்கியல் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் (சாதாரண) | 03 ஆண்டுகள் | 600,000 | |
| 8 | | **CCOM46** வர்த்தக பகுப்பாய்வு தொடர்பான முகாமைதத்துவ மானி (சிறப்பு) பட்டம். | 04 ஆண்டுகள | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 9 | | **CCOM47** வர்த்தக பகுப்பாய்வு தொடர்பான முகாமைத்துவமானி பட்டம். | 03 ஆண்டுகள | 600,000 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | **CINEC** | **DCOM09** - விநியோக செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவமானி (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 11 | | **DCOM08** - சில்லறை வர்த்தகம் மற்றும் நாமங்கள் தொடர்பான முகாமைத்துவ சிறப்பு | 04 ஆண்டுகள் | 800,000 | |
| 12 | | **DCOM18** - மானிட வள முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவமானி (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | |
| 13 | | **DCOM19** - வர்த்தக நிர்வாகம் தொடர்பான முகாமைத்துவமானி (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | |
| 14 | | **DCOM20** - கைத்தொழில் முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவமானி சிறப்புப் பட்டம் | 04 ஆண்டுகள் | 800,000 | |
| 15 | | **DCOM21** - வங்கியியல் மற்றும் நிதி தொடர்பான (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் "C" சித்தியினைப் பெற்றிருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | **CINEC** | **DCOM48** சந்தைப்படுத்தல் தொடர்ாபான வர்த்தக முகாமைத்துவமானி (சிறபபு) | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 17 | | **DCOM49** கணக்கியல் தொடர்பான வர்த்தக முகாமைத்துவ மானி (சிறப்பு) | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல். |
| 18 | **HORIZON** | **GCOM11**- வர்த்தக முகாமைத்துவம் தொடர்பான பட்டம் (மானிட வள முகாமைத்துவம்) | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 19 | | **GCOM12**- சந்தைப்படுத்தல் தொடர்பான முகாமைத்துவ (சிறப்புப்) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | |
| 20 | | **GCOM43**- கணக்கியல் மற்றும் நிதியியலில் முகாமைத்துவம் தொடர்பான (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | KIU | **HCOM13** - மானிட வள முகாமைத்துவ சிறப்பு பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 22 | | **HCOM14** - சந்தைப்படுத்தல் முகாமைத்துவ சிறப்பு பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | |
| 23 | | **HCOM15** - கணக்கீட்டு முகாமைத்துவ சிறப்புப் பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல். |
| 24 | SLTC | **ICOM24** - விநியோக முகாமைத்துவம் தொடர்பான வர்த்தக முகாமைத்துவமானி சிறப்புப் பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 25 | | **ICOM25** - செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான வர்த்தக முகாமைத்துவமானி சிறப்பு | 04 ஆண்டுகள் | 800,000 | |
| 26 | | **ICOM33** - சுற்றுலா மற்றும் உபசரணை முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானிப் பட்டம். | 04 ஆண்டுகள் | 900,000 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27 | **SLTC** | **ICOM27** - மானிட வள முகாமைத்துவம் தொடர்பான வர்த்தக முகாமைத்துவமானி சிறப்புப் பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | |
| 28 | | **ICOM26** - கணக்கியல் மற்றும் நிதி தொடர்பான முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவமானி சிறப்புப் பட்டம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல். |
| 29 | **SAEGIS** | **JCOM30** - வர்த்தக நிர்வாகமானி பட்டம் | 3 ஆண்டுகள் | 600,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 30 | | **JCOM35** - கணக்கியல் மற்றும் நிதியியலில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். **மற்றும்** கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல். |
| 31 | | **JCOM36** - சந்தைப்படுத்தலில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 32 | | **JCOM37** -மனிதவள முகாமைத்துவத்தில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி | 04 ஆண்டுகள் | 900,000 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 33 | **SAEGIS** | **JCOM38** - வியாபார முகாமைத்துவ இளமாணி கௌரவம் | 04 ஆண்டுகள் | 900,000 | |
| 34 | | **JCOM50** - சுற்றுலா மற்றும் உபசரணை தொடர்பான வர்த்தக முகாமைததுவமானி சிறப்புப் பட்டம். | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல |
| 35 | | **JCOM55 -** போருள் ஏற்பாட்டியல் மற்றும் வழங்கட்டுசங்கிலி முகாமைதுவத்தில் வர்த்தக முகாமைததுவமானி கௌரவம் | 04 ஆண்டுகள் | 900,000 | |
| 36 | **SIBA** | **ECOM34** - வியாபார முகாமைத்துவ இளமாணி கௌரவம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 37 | **ICBT** | **MCOM31** - வியாபார முகாமைத்துவ இளமாணி கௌரவம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 38 | **BCI** | **NCOM32** - வியாபார முகாமைத்துவ இளமாணி கௌரவம் | 04 ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 39 | | **NCOM51** சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவமானி சிறப்புப் பட்டம். | 04 ஆண்டுகள | 900,000 | |
| 40 | | **NCOM52** மானிட வள வர்த்தக முகாமைத்துவம் தொடர்பாபான சிறப்புப் பட்டம். | 04 ஆண்டுகள | 900,000 | |
| 41 | | **NCOM53** கணக்கியல் தொடர்பான வர்த்தக முகாமைத்துவ சிறப்புப் பட்டம். | 04 ஆண்டுகள | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | **மற்றும்**<br>கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல். |
| 42 | **ESOFT Metro Campus** | **LCOM40** -<br>வியாபார முகாமைத்துவ இளமாணி கௌரவம் | 04<br>ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 43 | **RIC** | **PCOM41** -<br>சர்வதேச பொருளியல் மற்றும் நிதியியல் வியாபார கௌரவ இளமாணி | 04<br>ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல்.<br>**மற்றும்**<br>கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல் **மற்றும்**<br>க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் பாடத்தில் குறைந்த பட்சம் “C” சித்தியினைப் பெற்றிருத்தல் மற்றும்<br>க.பொ.த (உயர் தரப்) பரீட்சையில் சாதாரண ஆங்கிலம் பாடத்தில் குறைந்த பட்சம் “S” சித்தியினைப் பெற்றிருத்தல். |
| 44 | **BMS** | **QCOM42-**<br>வியாபார முகாமைத்துவ இளமாணி கௌரவம் | 04<br>ஆண்டுகள் | 900,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடவிதானங்களின் கீழ் 03 சாதாரண சித்திகளை “S” ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 45 | | **QCOM56**<br>வணிக மேலாண்மை இளமாணி கௌரவம் | 03<br>ஆண்டுகள் | 600,000 | |

## *2.3.3* **உயிரியல்** விஞ்ஞானப் பாடவிதானம்

| | நிறுவனத்தின் பெயர் | வழங்கப்படும் பட்ட வேலைத்திட்டம் | கால எல்லை | பாடநெறிக் கட்டணம் | பதிவு செய்வதற்கான குறைந்தபட்ச தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | **AQUINAS** | **KBIO09** - விவசாய கைத்தொழில் முகாமைத்துவ விஞ்ஞான கௌரவ பட்டம் | 04 ஆண்டுகள் | 1,200,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் கீழே தரப்பட்ட இரண்டு பாடங்களுடன் ஏதேனும் ஒரு பாடம் உள்ளடக்கியதாக 3 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல்.<br><br>உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், உயர் கணிதம் அல்லது இணைந்த கணிதம், விவசாயம், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், விவசாய தொழில்நுட்பவியல், உயிர் வள தொழில்நுட்பவியல் மற்றும் உணவு தொழில்நுட்பவியல். |
| 2 | **CINEC** | **DBIO08** - ஒப்பனைக் கலை விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி (கௌரவ) பட்டம் | 04 ஆண்டுகள் | 1,200,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் கீழே தரப்பட்ட இரண்டு பாடங்களுடன் இரசாயனவியல் அல்லது தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்காக 3 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல்.<br><br>உயிரியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், பொறியியல் தொழில்நுட்பவியல், விவசாய தொழில்நுட்பவியல், உயிர் வள தொழில்நுட்பவியல் மற்றும் உணவு தொழில்நுட்பவியல். |
| 3 | | **DBIO14** வைத்திய மற்றும் சுகாதார உற்பத்தி முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம். | 04 ஆண்டுகள் | 1,200,000 | கல்விப் பொதுத்தராதர பத்திர (உயர்தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதீக விஞ்:ஞானம் அல்லது தொழில்நுட்ப பாடவிதானத்தில் குறைந்த பட்சம் "S" சித்திகள் மூன்று ஓரே தடவையில் பெற்றிருத்தல். |
| 4 | | **DBIO15** இரசாயண விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | 04 ஆண்டுகள் | 1,200,000 | கல்விப் பொதுத்தராதர பத்திர (உயர் தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பாடவிதானத்தில் அல்லது பௌதீக விஞ்ஞான பாடவிதானத்தில் குறைந்த பட்சம் "S". மூன்று சித்திகளை ஓரே தடவையில் பெற்றிருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | CINEC | **DBIO07**<br>கைத்தொழில் மருந்தாக்க விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம். | 04 ஆண்டுகள | 1,200,000 | கல்விப் பொதுத்தராதர பத்திர (உயர்தர) பரீட்யையில் கீழ் குறிப்பிடப்பட்ட இரண்டு பாடங்களுடன் இரசாயண விஞ்ஞானம் அல்லது விஞ்ஞானத்திற்காக தொழில்நுட்ப என்ற பாடங்களுக்காக “S” சித்திகள் (3) ஓரே தடவையில் பெற்றிருத்தல். ஊயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், உயிரியல் முறைமை தொழில்நுட்ப, பொறியியல் தொழில்நுட்பம், விவசாய தொழில்நுட்பம், உயிரியல் வள தொழில்நுட்பம் மற்றும் உணவு தொழில்நுட்பம். |
| 6 | | **DBIO06**<br>விஞ்ஞானமானி உயிர் வைத்திய விஞ்ஞான கௌரவ பட்டம் | 04 ஆண்டுகள | 1,200,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்காக 3 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 7 | KIU | **HBIO02 -**<br>விஞ்ஞானமானி உயிர் வைத்திய விஞ்ஞான கௌரவ பட்டம் | 04 ஆண்டுகள் | 1,200,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்காக 3 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். |
| 8 | | **HBIO03 -**<br>குத்தூசி ஏற்றும் விஞ்ஞானம் தொடர்பான வைத்திய விஞ்ஞான கௌரவ பட்டம் | 04 ஆண்டுகள் | 1,200,000 | |
| 9 | HORIZON | **GBIO13 -**<br>உயிர் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானமானி கௌரவ | 04 ஆண்டுகள் | 1,200,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் கீழே தரப்பட்ட பாடங்கள் ஏதேனும் இணைந்ததாக 3 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல்.<br>உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், விவசாய தொழில்நுட்பவியல், உயிர் வள தொழில்நுட்பவியல். |
| 10 | ICHEM | **OBIO12 -**<br>இரசாயன விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி கௌரவ பட்டம் | 04 ஆண்டுகள் | 1,200,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் கீழே தரப்பட்ட பாடங்கள் ஏதேனும் இணைந்ததாக 3 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | 1. இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் உயிரியல்.<br>2. இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது கணிதம், உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞானம்.<br>3. இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம். |
| 11 | **RIC** | **PBIO16**<br>விஞ்ஞானமானி உயிர் வைத்திய விஞ்ஞான கௌரவ பட்டம் | 04 ஆண்டுகள | 1,200,000 | கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்காக 3 சாதாரண சித்திகளை "S" ஒரே தடவையில் பெற்றிருத்தல். |

### *2.3.4* பொறியியல் தொழில்நுட்பவியல் பாடவிதானம்

| | நிறுவனத்தின் பெயர் | வழங்கப்படும் பட்ட வேலைத்திட்டம் | கால எல்லை | பாடநெறிக் கட்டணம் | பதிவு செய்வதற்கான குறைந்தபட்ச தகைமைகள் |
|---|---|---|---|---|---|
